## போராட்ட வரலாறு – ஆற்ற வேண்டிய கடமைகளை

# ‘வெல்லும் தமிழ்ப் பெண்கள்’ மாநாடு சொல்லும்!

### முதல்வர் மு.க.ஸ்டாலின் சமூக வலைதளப்பதிவு!

சென்னை, டிச. 30 –

போராட்ட வரலாறு மற்றும் வருங்காலத்தில் ஆற்ற வேண்டிய கடமைகளை பல்லடத்தில் நடைபெறும் ‘வெல்லும் தமிழ் பெண்கள்’ மாநாடு சொல்லும் என்று கழகத் தலைவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டு நேற்று முன் தினம் (28.12.2025) சமூக வலைதளப் பக்கத்தில் பதிவிட்டுள்ளார்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூக வலைதளப் பதிவு வருமாறு:-

**தமிழ்நாட்டில் உள்ள நம் சகோதரிகள் அனைவரும் #வெல்லும்_தமிழ்ப்_பெண்கள்தான்! திராவிட இயக்கத்தால் தலைநிமிர்ந்து வெற்றி நடை போடும் போராட்ட வரலாற்றையும் வருங்காலத்தில் ஆற்ற வேண்டிய கடமைகளையும் பல்லடத்தில் நடைபெறும் #வெல்லும்_தமிழ்ப்_பெண்கள் மேற்கு மண்டல @DMK Womens Wing மாநாடு சொல்லும்!**

இவ்வாறு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பதிவிட்டுள்ளார்.

## தமிழர்களின் பெருமையை பறைசாற்ற

# வரலாற்றுப் பதிவுகள் மிக அவசியமாகும்!

### மலேசியாவில் நடைபெற்ற நூல் வெளியீட்டு விழாவில் டத்தோ ஸ்ரீ சரவணன் பேச்சு!



மலேசியாவில் வெளிநாடு வாழ் தமிழ் இந்தியர்கள் சங்கம் சார்பில் டாக்டர் கலாநிதி வீராசாமி எம்.பி. தலைமையில் நடைபெற்ற தமிழ் நூல்கள் வெளியீட்டு விழாவில் ம.இ.கா. தேசியத் துணைத் தலைவர் டத்தோ ஸ்ரீ எம்.சரவணன் பங்கேற்று நூல்களை வெளியிட்டு சிறப்புரையாற்றினார்.

கோலாலம்பூர், டிச. 30 –

திருக்குறளை எடுத்துக்கொண்டால், அது இரண்டாயிரம் ஆண்டுகளைக் கடந்த ஒரு இலக்கியம். இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே நம்முடைய தமிழர்களின் நாகரிகம், பண்பாடு உயர்ந்த நிலையில் இருந்தது என்பதை இது நிரூபிக்கிறது. ரோமானிய பேரரசுடன் தமிழர்கள் வாணிபம் செய்த வரலாறையும் நாம் மறக்க முடியாது என்று மஇகா தேசியத் துணைத்தலைவர் டத்தோஸ்ரீ எம்.சரவணன் தெரிவித்தார்.

இது போன்ற காலகட்டங்களில், நம்முடைய சோழர்களின் வரலாறும், குறிப்பாக ராஜராஜ சோழரின் வரலாறும் சரியாக பதிவு செய்யப்படவில்லை என்றால், அடுத்த தலைமுறைக்கு நம்முடைய பண்பாடும் பெருமையும் தெரியாமல் போய்விடும். அத னால் தான் இது போன்ற வரலாற்றுப் பதிவு மிக அவசியமானதாக கருதப்படுகிறது என்றும் டத்தோ ஸ்ரீ சரவணன் குறிப்பிட்டார்.

ம.இ.கா. தலைமையகம், நேதாஜி மண்டபத்தில் நடைபெற்ற தமிழ் நூல்கள் வெளியீட்டு விழாவிற்கு தலைமையேற்று உரையாற்றுகையில் டத்தோஸ்ரீ சரவணன் மேற்கண்டவாறு கூறினார்.

வெளிநாட்டு வாழ் தமிழ் இந்தியர்கள் சங்கம், மலேசிய தமிழர்கள் சங்கம், மஇகா மற்றும் மாமன்னர் ராஜ ராஜ சோழர் வரலாற்று ஆய்வு, பண்பாட்டு மையம் ஆகியவற்றின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்த நூல் வெளியீட்டு விழாவிற்கு வட சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் கலாநிதி வீராசாமி தலைமையேற்று சிறப்பு வருகைப் புரிந்திருந்தார்.

தி.மு.க. ஆட்சியில் அயலக தமிழர் நலனும் தமிழ் மொழி வளர்ச்சியும் என்ற நூல்களின் ஆசிரியர் ஸ்ரீதரன் கல்யாணசுந்தரம் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களின் தி.மு.க. ஆட்சியில் அயலக தமிழர்கள் நலனை காக்கவும் தமிழ் வம்சாவளி இளம் தலைமுறையினர் எளிதாக தாய்மொழியான தமிழை கற்கவும் தாய் தமிழ்நாட்டுடன் என்றுமே தொடர்பில் இருப்பதற்கு பல்வேறு திட்டங்களை கொண்டுவந்துள்ளார் என்றும்,சோழ பேரரசர்கள் வரலாற்று நூல் வருங்கால தலைமுறைக்கு சென்று சேர எளியநடையில் எழுதப்பட்டுள்ளது என்றும் தெரிவித்தார்

எம்.கே. மணிகண்டன் வரவேற்புரையுடன் சிங்கப்பூர் தமிழ்நாடு அரசு அயல்நாடு தமிழர் நல வாரிய உறுப்பினர் ஜி.வி. ராம் முன்னிலையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் மஹ்சா பல்கலைக்கழகத்தின் நிர்வாகத் தலைவர் டான்ஸ்ரீ டாக்டர் முகம்மது ஹனிபா, கிரீன்பாக்கெட் நிறுவனத்தின் தலைமைச் செயல்முறை அதிகாரி டத்தோ ஷாகுல் தாவூத், தமிழ்நாடு அரசு அயல்நாடு தமிழர் நல வாரிய உறுப்பினர் முகம்மது ஃபைசல், மலேசிய தமிழ் எழுத்தாளர் சங்கத்தின் அயலகத் தொடர்புக் குழு தலைவர் பெ. இராஜேந்திரன் ஆகியோர் சிறப்பு பிரமுகர்களாக கலந்து கொண்டு உரை நிகழ்த்தினர்.

இன்று வெளியிடப்படும் இந்த நூல், சரியான காலத்தில், சரியான தேவைக்காக வந்திருக்கிறது என்று டத்தோஸ்ரீ சரவணன் தமது உரையில் குறிப்பிட்டார். இந்த கூட்டத்தில் ராஜராஜ சோழரின் பெருமையை உணர்ந்த பலரும் இருப்பது மகிழ்ச்சியான விஷயமாகும்.

உண்மையான செய்திகள் சமூகத்திற்கு சென்று சேர வேண்டும். வரலாறு திரித்து சொல்லப்படக் கூடாது. தமிழ்நாட்டின் வரலாற்றை நாம் நேர்மையாகப் பார்த்தால், மொழி, கலை, கலாச்சாரம், பண்பாடு ஆகியவை பாதுகாக்கப்பட்ட காலம் திராவிட ஆட்சிக்காலம்தான் என்பதையும் யாராலும் மறுக்க முடியாது.

அயலகத்துறை என்பது ஒரு சாதாரணத் துறை அல்ல. அது ஒரு நாட்டின் வெளியுறவுத் துறைக்கு இணையான முக்கியத்துவம் கொண்டது. அந்த அளவிற்கு பொறுப்புடன், தமிழ்நாட்டின் எல்லைகளைத் தாண்டியும் தமிழர்களின் நலனை காக்கும் பணிகள் நடைபெற்று வந்துள்ளன.

எங்களைப் பொருத்தவரை, இது ஒரு அரசியல் கட்சி சார்ந்த விஷயம் அல்ல. தமிழ்நாட்டின் எல்லைகளைத் தாண்டி, உலகம் முழுவதும் வாழும் தமிழர்களின் வாழ்க்கை, மொழி, பண்பாடு ஆகியவற்றை பாதுகாப்பதே நம்முடைய நோக்கமாகும்.

இந்த அரிய நிகழ்ச்சியை ஏற்பாடு செய்த அனைவருக்கும், இந்த நூலை வெளியிட்ட அனைவருக்கும் டத்தோஸ்ரீ சரவணன் தமது நன்றியை தெரிவித்துக்கொண்டார்.



துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நேற்று (29.12.2025) தலைமைச் செயலகத்தில் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் சார்பில் நடத்தப்படவுள்ள இந்திய, சர்வதேச இளையோர் பாய்மரப் படகுப் போட்டி சாம்பியன்ஷிப் 2026 (SDAT INDIA INTERNATIONAL YOUTH SAILING CHAMPIONSHIP IIR ) மற்றும் 5150 டிரையத்லான் சென்னை – 2026 போட்டிகளுக்கான முன்னேற்பாட்டு பணிகள் குறித்த ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ. மேகநாத ரெட்டி, அரசு உயர் அலுவலர்கள், காவல்துறை, கடற்படை, கடலோர காவல்படை உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## திருப்பத்தூர் மாவட்டம்

# ஆம்பூர் கிழக்கு நகர புதிய தி.மு.க. அலுவலகம்!

### அமைச்சர் எ.வ.வேலு திறந்து வைத்தார்!

*திருப்பத்தூர், டிச 30 -*

*திருப்பத்தூர் மாவட்டம் ஆம்பூரில் கிழக்கு நகர தி.மு.க. புதிய அலுவலகத்தை பொதுப்பணி மற்றும் நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் எ.வ.வேலு திறந்து வைத்தார்.*

*ஆம்பூர் நகர கிழக்கு தி.மு.க. சார்பில் ஆம்பூர் அடுத்த கன்னிகாபுரம்*

*எம்.சி.ரோட்டில் புதிய தி.மு.க. அலுவலக திறப்பு விழா நடந்தது.*

*நிகழ்ச்சிக்கு நகர செயலாளர் ஷபீர்அகமத் தலைமை தாங்கினார்.*

*நிகழ்ச்சியில் சிறப்பு அழைப்பாளராக நெடுஞ்சாலை மற்றும் பொதுப் பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு கலந்து கொண்டு நகர தி.மு.க. புதிய அலுவலகத்தை திறந்து வைத்து கொடி ஏற்றி அனைவருக்கும் இனிப்பு வழங்கினார்.*

*அப்போது அ.தி.மு.க. மற்றும் மாற்றுக் கட்சியைச் சேர்ந்த 200 பேர் அமைச்சர் எ.வ.வேலு முன்னிலையில் தி.மு.க.வில் இணைந்தார்கள்.*

*நிகழ்ச்சியில் மாவட்டக் கழக செயலாளர் க.தேவராஜி எம்.எல்.ஏ., வேலூர் வடக்கு மாவட்டப் பொறுப்பாளர் நாடாளு மன்ற உறுப்பினர் டி.எம். கதிர் ஆனந்த், திருவண்ணாமலை நாடாளுமன்ற உறுப்பினர் சி.என்.அண்ணாதுரை, மாவட்ட கழக துணை செயலாளர் டி.எம். மோகன், ஆம்பூர் சட்டமன்ற உறுப்பினர் அ.செ.வில்வநாதன், மாவட்ட அவைத் தலைவர் ஆர்.எஸ். ஆனந்தன்,*

*நகராட்சி தலைவர் ஏஜாஸ்அகமத், நகர செயலாளர்கள் எம்.ஆர்.ஆறுமுகம், சாரதிகுமார், கயாஸ் அகமத், ஒன்றியக் கழக செய லாளர்கள் ப.ச. சுரேஷ் குமார், ஞானவேலன், உமாகன்ரங்கம், கவிதா, நகராட்சி உறுப்பினர்கள் ரமேஷ், வசந்த ராஜ், கார்த்தி, கமால் பாஷா, கவுரி, நசீர் அகமத், தனபாக்கியம் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.*

